படவேண்டும். எப்படியும் அந்த மாத இறுதிக்குள் காசோலையை அந்தந்தப் பள்ளி மேலாளருக்கு ஒன்றியக் குழுவின் ஆணையாளர் அனுப்பி வைக்கவேண்டும் என்று இருக்கிறது. காலத்தாழ்வு ஏற்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுத்து, மாத இறுதிக் குள்ளாகக் காசோலை அனுப்பி வைக்கப்படுவதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஒன்று முதல் மூன்று தேதிக்குள்ளாக ஆசிரியர்கள் சம்பளங்களைப் பெறவேண்டும் என்ற முயற்சியின் அடிப்படைதான் இருக்கிறது. ஆகவே, இப்படிப் பட்ட குறைபாடுகள் அதிகமாகக் கவனத்திற்கு வரவில்லை. அதிக மாக வருமானால் மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற யோசனையைப் பரிசீலிக்கலாம்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்ட காலத்தில் எத்தனை பள்ளிகள் இருந்தனவோ, அந்தப் பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் இருந்தார்களோ, அந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை அடிப்படையில்தான் இப்பொழுதும் நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். அதன்பிறகு புதிதாக ஆசிரியர்கள் நியமித்திருக்கின்ற அந்தப் பட்டியல் அளவுக்கு நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் ஒவ்வொரு மாதமும் முதல் தேதி சம்பளம் போட முடியாத நிலைமை இருக்கிறது என்பதை அரசு ஆலோசிக்குமா? புதிதாகப் பள்ளி விவரம் சேசரித்து ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் புதிய ஆசிரியர்கள் போட்டிருப்பதை அடிப்படையாக வைத்து நிதி ஒதுக்கீடு செய்வார்களா என்பதை தான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று, இதை ஒன்றியங்கள் ஏற்பட்ட காலத்தில் இருந்த எண்ணிக்கையை வைத்துப் போட வில்லை. அவ்வப்போது சேர்க்கப்பட்டிருக்கிற ஆசிரியர்களைக் கணக்கெடுத்து, அவர்களையும் சேர்த்துத்தான் சம்பளம் கொடுக்கப் படுகிறது. அப்படிக் கொடுக்காவிட்டால், அவர்களே கிளர்ச்சி செய்து சம்பளத்தைப் பெறத்தான் செய்வார்கள். கொடுக்கப்படா மலிருக்கும் சூழ்நிலை ஏற்படாது. 1 முதல் 3-ந் தேதிக்குள் கட்டாயம் கிடைக்கவேண்டும் என்ற முறைதான் இருக்கிறது. விவரங்கள் மாத இறுதிக்குள்ளாக அனுப்பப்பட வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

திருவையாறு தமிழ்க் கல்லூரி

* 80 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

திருவையாற்றில் உள்ள தமிழ்க் கல்லூரியை விரிவுபடுத்தி அதிக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

1970 சனவரி 27]

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தமிழ் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் நாட்டிலே பெருகிவருகிறது. திருவையாறு தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டும் என்று ஏராளமான பேர் ' அப்ளை ' செய்திருந்தபோதிலும், பெரும்பாலான வர்களுக்கு அதில் இடம் கிடைக்கவில்லை. அடுத்த ஆண்டில் அதிகப் படியான இடங்கள் ஒதுக்க உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திருவையாறு தமிழ்க் கல்லூரியில் இப்பொழுது அங்கிருக்கும் இட வசதி, விடுதி வசதி ஆகியவற்றைப் பொறுத்துத்தான் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். 1968-69-ம் ஆண்டில் 359 மாணவ மாணவியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அங் கிருக்கும் இட வசதி போதாமல் இப்போதே இட நெருக்கடி இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இவ்வளவுதான் அங்கே முடியும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுகிற நேரத்தில் மேலும் அதை விரிவுபடுத்துவதற்கோ, மேலும் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்கோ இல்லை. தஞ்சை மாவட்டத்தில் வேறு பல தமிழ்க் கல்லூரிகள் இருக்கின்றன. கரந்தை, திருப்பனந்தாள் ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகளும் பகிர்ந்து கொள்ளும் அளவுக்குத்தான் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திருவையாற்றில் இருக்கும் தமிழ்க் கல்லூரிபோல மேலும் அதிகமாகத் தமிழ்க் கல்லூரிகள் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா.நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதிலே படித்து வெளிவருகிற தமிழ் புலவர்களையே வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வாய்ப்புக் குறைவாக இருக்கிறது. வெளி வரு கிற ஆசிரியர்களை போதுமான அளவிற்கு வேலையில் அமர்த்தக் கூடிய நிலையைப் பொறுத்துத்தான் புதிய கல்லூரிகள் அமைப் பதை ஆலோசிக்க வேண்டும். அப்படி இப்பொழுது அமைக்க அவசியம் இல்லை. நாட்டின் தேவையை நிறைவேற்றும் வகையில் இருக்கும் தமிழ்க் கல்லூரிகளில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, திருவையாறு தமிழ்க் கல்லூரியில்தான் இலவசமாக (ஃப்ரீ போர்டிங்) சாப்பாடு போடப்படும் வாய்ப்பு இருக்கிறது. அது போன்று அந்தக் கல் லூரியில் அதிகமாக மாணவர்களைச் சேர்த்தால் ஏழைகளுக்கு உதவியாக இருக்கும். ஆனால், அதிகமாக மாணவிகளைத்தான் சேர்க்கிறார்கள் என்ற குறைபாடு இருக்கிறது. ஆகவே, அங்கே அதிகமாக மாணவர்களைச் சேர்க்கும் வாய்ப்பினை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருவையாற்றுக் கல்லூரி சத்தரம் நிர்வாகத்தின்கீழ் இருப்பதால் அங்கே இலவச மாக உணவு அளிக்க வேண்டும் என்ற முறையிருக்கிறது. வேறு

பல கல்லூரிகளிலும் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலைதான் தமிழ்க் கல்லூரிகளைப் பொறுத்தவரை இருக்கிறது. இடையில் புலவர் படிப்புக்கு மாணவிகளைமட்டும் சேர்ப்பது என்று 1965-66-ல் ஒரு முடிவு எடுத்தார்கள். அப்பொழுது மாணவர்களைச் சேர்க்கவில்லை. அதன் பிறகு 1967-68-ல் 50:50 என்ற அளவில், மாணவர்கள் பாதி, மாணவிகள் பாதி என்ற அளவில் சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் முடிவு எடுத்து அப்படிச் சேர்க்கப்படுகிறார்கள்.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்க் கல்லூரியில் சித்த, ஆயுர்வேத முறை மருத்துவத்தையும் பாடமாக அமைந்துக் கொடுக்க அரசாங்கம் முற்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தக் காலத்தில் தமிழ்ப் புலவர்கள் வைத்தியர்களாகவும் இருந்தார்கள். புலவர் பாடத்தோடு, மருத்துவத்தையும் படித்தார்கள். இப்பொழுது, தமிழ்ப் புலவர்களுடைய பணி தனியாக இருக்கிறது. சித்த, ஆயுர்வேத மருத்துவத்தைப் படிக்க தனியாக கல்லூரி இருக்கிறது. ஆகவே, புலவர் பாடத்தோடு மருத்துவத்தையும் இணைப்பது பொருத்தமானது அல்ல.

School in Therikudiyiruppu

*81 Q.—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether any school is functioning at present with the consent of the Tiruchendur Panchayat Union in Therikudiyiruppu village of Tiruchendur taluk in Tirunelveli district; and

(b) if so, the reasons for the Government not recognising it?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அந்தப் பள்ளிக்கு 1-6-1968 முதல் 31-5-1970 வரை தாற்காலிக ஏற்பு ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இதேபோன்று ராதாபுரம் பஞ்சாயத்து யூனியனிலுள்ள பள்ளிக்கூடங்கள் சம்பந்தமாக திறக்கப்பட்ட பின்னர் அனுமதி வேண்டும் என்று கோரி அரசாங்கத்திற்கு மனுச் செய்திருக்கிறார்கள். அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆதலால், அமைச்சரவர்கள் அதைக் கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இரண்டு மூன்று ஆண்டு காலத்திற்கு முன்பு ஊராட்சி ஒன்றியங்கள் பள்ளிக்கூடங்களைத் துவக்கி, நிபந்தனை அடிப்படையில் இல்லாமல், அவற்றை மூடுவதா, இல்லையா என்ற பிரச்சினை எழுந்தது. பல பள்ளிக்